# சுவிஸ்வங்கி ரகசிய கணக்குகளை ரத்துசெய்ய முடிவு

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 2 இதழ் 316
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17-12-1994

(கொழும்பு)
சுவிஸ் வங்கிக் கணக்கு முறையை ரத்துச் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து சுவிஸ் வங்கிக் கணக்குகள் அனைத்தையும் ரத்துச் செய்வதற்கும் அரசு மேலும் முடிவு செய்துள்ளது.

சுவிஸ் வங்கியில் தமது பணத்தை வைப்பிலிடுபவரின் பெயர், விபரங்கள் எதுவும் வெளியிடப்படமாட்டாது. அவை அந்த வங்கியினால் இரகசியமாகவே பாதுகாத்து வைக்கப்படுவது வழக்கம். வங்கிக் கணக்கு ஒரு குறிப்பிட்ட இலக்கத்தின் ஊடாகவே இரகசியமாகவே நடைமுறைப்படுத்தப்படும்.

கடந்த நான்கு வருடங்

[4ம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர் வெற்றிடம் 1995ல் நிரப்பப்படும்

(கொழும்பு)
தற்போது பாடசாலைகளில் இருந்து வரும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

பாடசாலைகளின் வெற்றிடங்கள் ஏனைய குறைபாடுகளை விசாரிப்பதற்கு கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன செயற்குழு ஒன்றை

(4ம் பக்கம் பார்க்க)

### லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு காரணமாக

# இந்திய அரசியலில் சூறாவளி

# பிரதமர் ராவ் தாக்குப்பிடிப்பாரா?

## 20 அமைச்சர்கள் ராஜினாமா!

[புதுடில்லி]

இந்திய அமைச்சரவை மீதான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து இந்திய அரசியலில் பெரு சூறாவளி கிளம்பியுள்ளது. அமைச்சரவையில் இருபது அமைச்சர்கள் தமது ராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர் பிரதமர் நரசிம்மராவ் தமது அரசில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பூகம்ப நிலையை சமாளிப்பாரா என அரசியல் விற்பன்னர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவின் அமைச்சரவைச் சேர்ந்த இருபது அமைச்சர்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்ய முன்வந்ததைத் தொடர்ந்து திரு. ராவின் அரசு பெரும்நெருக்கடிக்குள்ளாகியுள்ளது, ஆனால் அமைச்சர்களின் ராஜினாமாக் கடிதங்களை பிரதமர் ஏற்க மறுத்துவிட்டார்.

[4ம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் 15,500 மீனவர் பாதிப்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் அண்மையில் பெய்த கடும் மழையினால் 15,500 மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பில் விவசாயக் குடும்பங்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டத்தின் நெல் செய்கை பண்ணப்படும் 57,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 28,000 ஹெக்டேயர் மட்டுமே இம்முறை நெல் செயகை பண்ணப்பட்டது.

இதில் 75 வீதமான நெல் வயல்கள் அண்மையில் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன. ரி

★ கொழும்பு நகருக்குள்

## புலிகள் ஊடுருவலை தடுக்க படையினர் கடும் நடவடிக்கை

(கொழும்பு)
கொழும்பிற்குள் புலிகளின் ஊடுருவலை தடுக்கும் நோக்குடன் படையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தீவிரவாக ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியிலிருந்து செல்லும் பிரயாணிகள் மீது வவுனியா தாண்டிக்குளத்தில் வைத்து கடும் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சந்தேகத்திற்குரியவர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## சமாதான பேச்சுக்களுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு

(கொழும்பு)
இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்குடன் சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மேற்கொள்ளவிருக்கும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு சர்வதேச சமூகம் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியா இந்த சமாதான பேச்சுவார்த்தைகளை வரவேற்றுள்ளனது.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்க இலாகாவின் தென்னாசியவ்வகார பிரதி உதவி ராஜாங்க அமைச்சர் வடக்கு கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் இது தொடர்பான முயற்சிகளுக்கு தமது ஆதரவு இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளார். (ரி]

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

### மகாசங்கத்தினர் பகிஷ்கரத்தாலும்

## பாப்பரசரின் விஜயத்தில் மாற்றம் ஏதும் இல்லை!

(கொழும்பு)
பரிசுத்த பாப்பரசரின் விஜயத்தை பகிஷ்கரிப்பதென பௌத்த மகாசங்கத்தினர் முடிவு செய்துள்ளபோதும் பாப்பரசரின் விஜயத்தில் எந்தவித மாற்றமும் இல்லையென அரசு அறிவித்துள்ளது.

இதேவேளையில் பாப்பரசரின் விஜயத்தை ஒரு மதப் பிரச்னையாக உருவாக்குவதற்கு சில தரப்பினர் முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனவாதப் பிரச்னையைப்

(4ம் பக்கம் பார்க்க)

## வைத்தியர் வேலைநிறுத்தம் நேற்று கைவிடப்பட்டது

(கொழும்பு)
அரசாங்க வைத்தியர்கள் தமது வேலை நிறுத்தத்தை நேற்று கைவிட்டார்கள்.

அரச வைத்திய நிறைவேற்றுக்குழுவின் தலைவர் டாக்டர் ஆனந்தசமரசேகரா இதுபற்றி பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில் அரசாங்கத்திடம் நாம் சமர்ப்பித்த கோரிக்கைகளை சுகாதார அமைச்சர் ஏற்றுக்கொண்டதினால் எமது வேலை நிறுத்தத்தை கைவிட்டு உடனடியாக வேலைக்குத் திரும்புவதென்று முடிவுசெய்துள்ளோம் என்று கூறினர். வி-ரி

## மனித உரிமைகள் அமைப்பு சிறிலங்கா மீது கண்காணிப்பு

(கொழும்பு)
சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச கண்காணிப்புக்குழு, ஏசியா வோச் ஆகிய மனித உரிமை அமைப்புகள், சிறிலங்கா மீது விழிப்புடனிருந்து எப்போதும் அறிக்கை வெளியிட்டு வருகின்றன.

இதற்கான காரணம் தொடர்ந்து சிறிலங்கா படையினர் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல் செயல்களே ஆகும். 1991-ல் சிறிலங்காவிற்கு வந்திருந்த ஐ. நா.வின் விசேட குழு ஒன்று சிறிலங்காவில் தான் அநேகமானோர் காணமல் போயுள்ளனர் என்று தெரிவித்தனர்.

புதிய அரசின் கீழ் அனுவசியக் கைதுகள் இடம்பெறுது என வடபகுதி மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் ஆனால் அது பொய்யாக்கப்படுகின்றது.

அடையாள அட்டையை வைத்திருக்காமையைச் சுட்

(4ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

ஆனந்தா
பஞ்சாங்கக் கலண்டர்

நாள், திதி, யோகம், நட்சத்திரம், கோயில் தினங்கள், விடுமுறை நாட்கள் முதலிய பல விபரங்களும் அடங்கிய மிகச் சிறந்த கலண்டர் மலிவு விலை ரூபா 30/- மட்டுமே.
(ஏ 4581)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## பொருட்கள் திருட்டு

(உடுவில்)

மானிப்பாய் கூளாவடி பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளைக் கடையில் 5000 ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுள்ள பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

இரவு வேளையில் கடையின் மேற்கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பால்மாவகைகள், சைக்கிள் ரயர்கள், சவர்க்காரங்கள் உள்ளிட்ட பல பொருட்களை திருடிச் சென்றுவிட்டனர் என்று கூறப்படுகிறது.
109

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ், மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

## இன்று

(கொழும்புத்துறை)

உரும்பராய் ஸ்ரீ பர்வதவத்தினி அம்பாள் ஆலய திருவிளக்கு, சுமங்கலிபூசை இன்று சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை, வழிபாடு ஆராதனைகளுடன் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ க. மு. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். -154

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீஅம்மன் ஐயனர் கோவில் மாதாந்த திருவிளக்குப்பூசை, சுமங்கலி பூசை வழிபாடுகள், பிரார்த்தனைகள் இன்று சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு விசேட அபிசேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். -154

0 0

(கொழும்புத்துறை)

யாழ் கொழும்புத்துறை மேற்கு சன சமூக மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நிலையத் தலைவர் திரு. கா. குணேசதாசன் தலைமையில் பூரணைக்கருத்தரங்குநடைபெறும். 'திருந்தாவிடில் சட்டத்தால் பயனில்லை' என்ற தலைப்பில் தமிழீழக் காவற்துறைப் பிரதிநிதிகள் கருத்துரை வழங்குவார்கள். -154

0 0 0

(அரியாலை)

யாழ் நாயன்மார்கட்டு சன சமூகநிலையத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5-00 மணிக்கு நடைபெறவிருக்கும் மாதாந்த அறிவியலரங்கு தொடர் 25 நிகழ்ச்சியில் விவசாயபாடவிதான உத்தியோகஸ்தர் திரு. பி. மரியநாயகம் 'நெற்பயிரின் பூச்சித் தாக்கங்களை கட்டுப்படுத்தும்முறை' என்பது பற்றி உரையாற்றுவார்.

# கூட்டுறவுசங்கங்களும்உணவுச் சுகாதாரத்தைதபேணவேண்டும்

(மானிப்பாய்)

யாழ். நகரில் இயங்கிவரும் தீவகப் ப. நோ. கூ. சங்கக் கிளையொன்றிலிருந்து, தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினரால் அண்மையில் பறிமுதல்செய்யப்பட்ட காலாவதியான ரின்பால் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன சங்க நிர்வாகிகள், காலாவதியான ரின்பாலைத் தெரிந்துகொண்டே விற்பனை செய்தமையை விசாரணையில் புலனாகியதோடு, மேலும் இது போன்ற உடைந்த பால்மா பைக்கட்டுகளை விலைகுறைத்து விற்பனை செய்து வந்தமையையும் அறிந்துகொள்ளமுடிந்தது உடைந்த பழுதடைந்த காலாவதியான பால்மா மற்றும் உணவு வகைகளினால் தொற்று நோய்க்கிருமிகள் தொற்று நோய்களை ஏற்படுத்தும் எனத் தாம் அறிந்துள்ளதாகவும் விசாரணையில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார சேவைப் பகுதியினருக்கு இவ்விடயம் முதற் தடவையாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபடியால், சங்க நிர்வாகிகள் எச்சரிக்கை செய்யப்பட்டதோடு இதுபோன்ற உணவு விநியோகச் சீர்கேடுகள் எதிர்காலத்தில் நடைபெறும் பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம் என அவர்களுக்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நாட்டுச் சூழ்நிலையில் பங்கீட்டு அடிப்படையில் உலர் உணவுப் பொருட்களை விநியோக்கும் ஏகபோக உரிமைகளைப் ப. நோ. கூ. சங்கங்கள் மேற்கொள்வதானது மிக மகத்தானதொன்றும். எமது பாரம்பரிய சொந்தப் பிரதேசங்களை விட்டு இடம் பெயர்ந்து, இருப்பிட வசதி, தொழில் வசதிகள் போன்றவற்றை இழந்து அகதி முகாம்களிலும், உற்ருர், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்ற நிலையில் உள்ள மக்கள் யாவரும் தமது அன்ருட உணவுத் தேவைகளைப் பங்கீட்டு முறையில் மனித போசனைக்குத் தீங்கு விளைவிக்காத உணவுப் பொருட்களை நிதானமாகப் பெற்றுக்கொள்வதற்குப் ப. நோ. கூ. சங்கங்களையே நம்பி இருக்கின்ருர்கள்.

தமது உணவுத் தேவைகளுக்காகக் கூட்டுறவுச் சங்கங்களையே நம்பி வாழும் பெரும்பாலான மக்களுக்குத் தரமான பொருட்களைச் சுகாதார முறைப்படி களஞ்சியப்படுத்தி, காட்சிப்படுத்தி விநியோகம் செய்யும் பொறுப்பைச் சங்க நிர்வாகமே செய்து கொடுக்க வேண்டுமெனத் தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் எதிபார்க்கின்ருர்கள்.

மேலும், இந்நடவடிக்கைகள் தொடர்வதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினரால் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திடீர்ப் பரிசோதனைகளில் தேவையேற்படும் பட்சத்தில் மாதிரிப் பொருட்களை எடுப்பதற்கும் சகல உணவுப் பொருள் நிலையத்தினரும் ஒத்துழைப்பை நல்குமாறு, தமிழீழ சுகாதார சேவைப்பொறுப்பாளர் வேண்டிக்கொள்கிருர். -சி

## மழைக்காக விசேட வழிபாடுகள்

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவை வழிபாட்டின்போது, வயல்களில் நீரின்மையால் மழை வேண்டி விசேட பூசை, வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் வரட்சி நிலவி நெற்பயிர்கள் அழியும் அபாயநிலை தோன்றியுள்ளதால் இப் பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.
-154

## பத்திரிகைக் கண்காட்சி

(உடுவில்)

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இடம்பெயர்ந்த ஈழத் தமிழ் மக்களால் வெளியிடப்படும்நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றைக் கொண்ட கண்காட்சியொன்று குசன்னையில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இக்கண்காட்சியை சிறப்புற ஒழுங்கமைப்பதில் ஈழத்து எழுத்தாளராகிய மாத்தளை சோமு ஈடுபட்டு வருகிருர்.

முதல் தடவையாக இத்தகைய ஒரு கண்காட்சி நடைபெற ஏற்பாடாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. 109

# மூன்று நாட்கள் நடைபெறும் சித்த வைத்திய மாநாடு

(பண்டத்தரிப்பு)

1995ம் ஆண்டு முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் சித்த வைத்திய ஆராய்ச்சி மாநாடு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இது தொடர்பான முக்கிய ஆலோசனைக் கூட்டம் அண்மையில் சித்தன்கேணியிலுள்ள கோபரல் சித்த வைத்திய மருந்து உற்பத்தி நிலையத்தில் நடைபெற்றது.

யாழ். சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி ஆராய்ச்சி மாநாட்டில் சித்த வைத்திய வரலாறு, சித்த வைத்திய இலக்கியம், தத்துவம், நோயியல், மருந்தியல் ஆகிய தலையங்கங்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு வாசிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாநாடு தொடர்பாக நடாத்தப்படவுள்ள கண்காட்சியில் ஈழத்து வைத்திய நூல்கள், ஏட்டுச்சுவடிகள், பாரம்பரிய இந்த மருத்துவ நூல்கள், சித்த மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள், மூலிகைகள் ஆகிய பல்வேறு துறைசார்ந்தவற்றை காட்சிக்கு வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சித்த வைத்தியர்களின் புகைப்படங்களை காட்சியில் வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது இறுதி நாள் நிகழ்ச்சியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. இந்த சித்தவைத்திய ஆராய்ச்சி மாநாட்டில் வெளிநாட்டு சித்தவைத்திய அறிஞர்களும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்பும் வைத்திய அறிஞர்கள் சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 72-சி


## கணக்கு எழுதுநர் எழுதுநர் பயிற்சியாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள்

கல்வித்தகைமை:

கணிதம், தமிழ் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கூடிய க. பொ. த. (சா/த) சித்தி

வர்த்தகப்பிரிவு பாடங்களுள்ளிட்ட க.பொ.த. (உயர்தரம்) சித்தி.

கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருத்தல் விசேட தகமையாகக் கொள்ளப்படும்.

எழுதுநர் பயிற்சியாளர் மட்டில் சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சியும், மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

கூட்டுறவுத் துறைசார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களிடமிருந்தே க/கு எழுதுனர் பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கபபடுகின்றன,

விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கூடாக முறையாக முன்னளிக்கப்பட வேண்டும்.

வயது:

க/கு எழுதுநர்:
45 வருடங்களுக்குள்

எழுதுநர் பயிற்சியாளர்:
25 வருடங்களுக்குள்

வேதனம்:

க/கு எழுதுநர்;
தற்போதைய சம்பள அளவையும் கவனத்தில் கொண்டு பொருத்தமான சம்பளம் வரையறை செய்யப்படும்.

எழுதுநர் பயிற்சியாளர்:
தகைமைக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30–12–94

விண்ணப்பிக்கும் முகவரி;

பொது முகாமையாளர்,
வட மாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்,
499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(எ 4590)



யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையத்தின்

## முக்கிய அறிவித்தல்

நத்தார் - புதுவருட பண்டிகையை முன்னிட்டு 17ம் திகதி சனிக்கிழமை, 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 24ம் திகதி சனிக்கிழமை, 31ம் திகதி சனிக்கிழமை முழுநாளும் யாழ். மாவட்டத்திலுள்ள சகல வணிக நிலையங்களும் வியாபாரத்திற்காக திறந்திருக்கலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்கின்றோம். நன்றி!

(எ-4589) செயலாளர்.



யாழ்ப்பாண மாநகரசபை

## பொது அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களுக்கு கடந்தகால வன்செயல்களினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய தகவல்கள் யாழ்ப்பாண மாநகரசபையால் திரட்டப்படுகிறது,

பாதிப்புற்ற வணக்கத் தலங்களின் தர்மகர்த்தாக்கள், பங்குத்தந்தைகள், நிர்வாகிகள் எதிர்வரும் 21-12-94 ஆம் திகதிக்கு முன்னர் மாநகரசபையின் மராமத்துப் பொறியாலாளருடன் தொடர்புகொண்டு இழப்பு தொடர்பான தகவல்களை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 16-12-1994. (எ-4591)

**மணிவாக்கு**

பணிவு, ஆடம்பரமின்மை, தீமை, பயவாமை, பொறுமை, நேர்மை, குருசேவை, தூய்மை, நிதானம், தன்னடக்கம் ஆகிய இவை அறிவு எனப்படும்.

- கிருஷ்ணபரமாத்மா

# எமது அரசை கவிழ்க்கும் நோக்கில் ஐ.தே.கவினர் செயற்பட்டு வருகிறார்கள்

## — சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

''நாட்டில் இன்று நடைபெறும் வேலை நிறுத்தங்களையும் செயற்கை விலைவாசி உயர்வுகளையும் ஐ. தே. க. வினரே வேண்டுமென்று ஏற்படுத்தி புதிய அரசுக்கு மக்கள் மத்தியில் உள்ள நம்பிக்கைக்கு, அபகீர்த்தி ஏற்படுத்தி, அரசைக் கவிழ்க்க வேண்டும் என்ற ஒரே நோக்குடனே செயல்பட்டு வருகின்றார்கள். இதை மக்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்''

இவ்வாறு ஜனாதிபதி திருமதி சந்திரிகா அண்மையில் அலரிமாளிகையில் தம்மை சந்தித்த தொழிற்சங்கப்பிரதிநிதிகளிடம் கூறியதாக பி. பி. ஸி தெரிவித்தது.

தற்போதைய வேலை நிறுத்தங்கள் பற்றி ஜனாதிபதி திருமதி சந்திரிகா மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

நாம் இந்த நாட்டின் ஆட்சியைப் பொறுப்பேற்று நாலு மாதங்கள் தான் ஆகின்றன. அதற்குள் நாட்டின் பல பகுதிகளிலும் 70-வது வேலை நிறுத்தங்கள் தூண்டிவிடப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் நாட்டை கடந்த 17 வருடங்களாக அடக்கு முறையில் ஆட்சி புரிந்துவந்த ஐ. தே. கட்சியினரே பொறுப்பாளிகள் என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்த நாட்டை பல ஆண்டுகளாக வாட்டி வதைத்து வரும் இனப்பிரச்னைக்கு நாம் முதலில் தீர்வு காண்பதற்காக முனைந்துவரும் இவ்வேளையில், எமது இந்த முயற்சியை குழப்பிவிடுவதற்காக பல தீயசக்திகள் வேலை நிறுத்தங்களையும் செயற்கை உணவுத்தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி விலைவாசிகளையும் உயர்த்திவருகின்றார்கள்.

வருமானத்தை ஈட்டும் நோக்குடன் யுத்தத்தை பிரமாண்டமான வியாபாரமாக கொண்டவர்களும் இந்த தீயசக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து இயங்கி வருவதை நாம் தற்போது இனங்கண்டுள்ளோம்.

இந்த தீய சக்திகள் தொழிலாளர்களை குழப்ப நிலைக்குள் தள்ளிவிடுகின்றார்கள். வெளிநாட்டு முதலீட்டாளர்களை பீதிகொள்ளச் செய்கின்றார்கள். இவர்களின் முயற்சிகள் வெற்றி பெற்றால், எமது நாட்டுக்கு பெருங்கேடு ஏற்படும். பொருளாதாரத் தடை ஏற்படும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள். எனவே இந்த சமூகவிரோத சக்திகளையிட்டு மக்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும்.

நாம் தேர்தல் காலங்களில் தொழிலாளர்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளோம். அவற்றை நாம் இன்னும் ஒரு வருடகாலத்துக்குள் படிப்படியாக நிறைவேற்றி வைப்போம். இதை பொதுமக்கள் நன்குஉணர்ந்து கொள்ளவேண்டும்'' என்றும் கூறியதாக பி. பி. ஸி தெரிவித்தது.

வி-சி

# நமது நோக்கு

## சாமவேதம் பாட வேண்டும்!

கோணேசுவரப் பதிகத்தில் எட்டாம் பாடலாக உள்ள, ''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்...'' என்பதில் வரும் காட்சி நினைவிருக்கிறதா?

தனது ஆணவப் பெருக்கால் கயிலைமலையைத் தூக்க முயன்றான் இராவணன். அதில் வீற்றிருந்த இறைவன் தமது திருவடி விரலாற் சற்று ஊன்றி, அவனை நலியவைத்து ஆணவத்தை அழித்தாராம்.

நலிவுற்ற இராவணன் சாமவேதம் பாடி, இறைவனை மகிழ்வித்து, வேண்டிய வரம் பெற்றான். இறைவனும் தனது பக்தர்களில் ஒருவனாக ஏற்றுக் கொண்டாராம்!

இன்று - ருஷ்ய வல்லரசு வலியிழந்த பின் அமெரிக்காவே உலக அரசியலில் முழு முதற் கடவுள் போலச் செயற்பட்டு வருகின்றது.

தமது நாட்டுக் கொள்கைக்கு மாறாக எந்த நாடும் தொழிற்பட்டால், நிதி உதவி என்ற காற் பெருவிரலால் அழுத்தம் கொடுத்து, அரசுகளை ஆட்டம் காண வைக்கிறது.

இந்தியா, சீனா போன்ற பெரிய நாடுகளையே தனது பெருவிரலால் அழுத்தி, சந்தைப் பொருளாதாரத்தை ஏற்க வைத்துள்ளது. அப்படியாயின் இலங்கை எம்மாத்திரம்?

முன்னைய ஐ. தே. க. அரசு அமெரிக்க வானொலி நிலையம் ஒன்றை இரணவில என்ற இடத்தில் அமைக்க ஒப்பந்தம் எழுதியது.

இடதுசாரிப் போக்குடைய இன்றைய அரசு அதற்கு மாறாக நடக்க முயல்வதை உணர்ந்த அமெரிக்கா அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கிய 'கோட்டாக்களை' அமெரிக்க அரசு நிறுத்தும் என 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமல்ல - அடுத்தாண்டிற்கான கோதுமையை வாங்குவதற்கான PL 480 திட்டப்படி வழங்கி வந்த நிதி உதவியையும் குறைத்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' கட்டுரை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் மூலம், இலங்கை சார்பாகப் பேசி, உரிய ஆதரவு நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஆளணி வசதிகள் தற்போது புதிய அரசிடம் இல்லை.

இனி என்ன? வெளியுறவு அமைச்சர், வர்த்தக அமைச்சர் ஆகியோர் அங்கு சென்று, 'சாமவேதம்' பாடி, அமெரிக்க அரசை மகிழ்ச்சிப்படுத்தி, தயவு காட்டும்படி இரந்து கேட்கும் நிலைதான் உருவாகி வருகிறது!

## புலதும் பத்தும்

### யாழ். இந்து

க. பொ. த. (உ/த) பரீட்சையில் யாழ். இந்து நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறதல்லவா? சிறப்பாகத் தேறிய மாணாக்கருக்கும் ஊக்கமுடன் உழைத்த அதிபர், ஆசிரியர்கட்கும் பாராட்டுக்கள்!

இக்கல்லூரியின் முன்னைய ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு உதாரணம்.

பண்டிதர் செல்லத்துரை பீ. ஏ. பட்டதாரியும் கூட. இக்கல்லூரியில் 26 வருடச் சேவையின் போது இவர் பெற்ற லீவு எவ்வளவு? 40 X 26 என்று நினைக்கிறீர்கள்? ஆக அரை நாள் லீவு மட்டுமே! அது கூடத் தனது மாமியார் மரணத்திற்காக! ''பண்பாட்டின் கருவூலம்'' என இவர் பற்றிச் சொக்கன் எழுதியிருந்தார்.

பி. கு: மூளாயைச் சேர்ந்த இவர் சங்கரத்தையிற் குடியிருந்தார்.

—மயூரன்

## இராசி பலன்

17 - 12 - 1994

சனிக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 02)

பூரணை முழுவதும் ரோகினி பி. ப. 2-54 வரை, அமிர்தசித்தம், பூரணை விரதம், இராகுகாலம் காலை 9-22 முதல் 10-52 வரை, சுபவேளை மாலை 3-22 முதல் 4-52 வரை.

மேடம்: முன்கோபம், தாயார் பகை, பணமுடை.

இடபம்: மனை சிறப்பு, விருந்தினர் கலகலப்பு, பயணம்.

மிதுனம்: காரிய தடை, பிறர்குறை, அலைச்சல்.

கடகம்; கடமை உணர்வு, தியாகசிந்தை, வெகுமதி.

சிங்கம்: தொழில் லாபம், தெய்வீகப்பணி, பாராட்டு.

கன்னி: கருத்து மோதல், அவப்பெயர், பணிவின்மை.

துலாம்: குறுகிய நோக்கம், பணமுடை, பதட்டம்.

விருச்சிகம்: பெண் உதவி, காரியசித்தி, பெரியோர் ஆசி.

தனுசு; குடும்பசுகம், சுபச் செய்தி, வாக்குவன்மை.

மகரம்: விவேகமற்றசெயல், தொழில் பகை, வெறுப்பு.

கும்பம்: கடன்பகை, ஏமாற்றம், மனைவி துயர்.

மீனம்: புத்திரர் பெருமை, அறிஞர் உதவி, சுபகாரியம்.

ஜோஸ்யர்

# தமிழக முகாமில் 58 தமிழ் இளைஞர்கள் 5 வருடமாக தடுத்துவைப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று கருதப்படும் 58 பேர் கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழக முகாமில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் மனித உரிமைக் கமிஷனிடம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டும் அல்லது செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்றார்.

மனித உரிமைக் கமிஷன் முன்னிலையில் இந்திய-இலங்கைநட்புறவுச் சங்கத்தலைவர் பி என். கோபாலன்கூறுகையில் ''அகதிகள் முகாமுக்கு நேரில் சென்று விசாரிப்பது கமிஷனின் முக்கிய கடமை என்று தெரிவித்தபோது, கமிஷன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சில முகாம்களைப் பார்க்கவுள்ளதாக உறுதியளித்தார்.

கமிஷன் தலைவராக நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா, நீதிபதி பாத்திமா பீபி, நீதிபதி மாரிமாக் ஆகியோருடன் கமிஷன் உறுப்பினர் தயா ஆகியோர் தமிழக அதிகாரிகளைச் சந்தித்தனர். அதன்பொழுது மேற்கண்ட முறைப்பாடுகள், பொது நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது,

ம-சி

## மாசில்லாத குழந்தைகள் திருநாள்

(அரியாலை)

கத்தோலிக்க கிறிஸ்துவ தேவாலயங்களில் எதிர்வரும் 28ந் திகதி புதன்கிழமை மாசில்லாத குழந்தைகள் திருநாள் கொண்டாடப்படவுள்ளது.

-59

## சிறுமி பலி

(அரியாலை)

கிணற்றில் தவறி விழுந்து சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார். அராலி தெற்கு மாவத்தையை சேர்ந்த செல்வராசா தரிசனா (வயது 07) என்ற சிறுமியே மரணமானவராவார்.

-59

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994—12-17 சனி இரவு

08-01 அறிவியல் கலசம்
08-10 நிகழ்வும் பகிர்வும்
08-25 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 சித்திரம் - ந. கிருஷ்ணா எழுதிய 'கடற்பலம்'
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1994—12-18 ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவையின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# ஆங்கில ஆசிரியர் பரீட்சை முடிவுகள் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 30ம் திகதி நாடு முழுவதிலும் வெளியான ஆங்கில உதவி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை யாழ். முடிவுகள் இதுவரை கிடைக்கவில்லை.

மேற்படி பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து சுமார் 5,000 பேர் தோற்றியிருந்தனர். எனினும் பரீட்சை முடிவுகள் வெளியாகி 17 நாட்கள் சென்றும், தமக்கு இம்முடிவுகள் கிடைக்காததையிட்டுப் பரீட்சார்த்திகள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

பரீட்சை முடிவுகளை உடனடியாகப் பெற்றுத் தர, சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர். -சி

# ஆஸ்பத்திரிகளில் பண்டேஜ் துணிக்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான அரசினர் வைத்தியசாலைகளின் மத்திய மருந்தகங்களில் காயங்களுக்கு மருந்து கட்டுவதற்கான 'பணடேஜ், துணிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேசமயம் சில வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவில் மருந்து கட்டுவதற்குத் தேவையான துணிகளைக் கொண்டு வருமாறு கேட்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

- 154

இலக்கிய பேரவையின்

# சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் 30வது நிறைவும் இலக்கியப்பேரவையின் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை 2-30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூதறிஞர் வரதர், மூத்த எழுத்தாளர் சு. வே. ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க தமிழ் வாழ்த்தையும் இலக்கிய வட்டக் கீதத்தினையும் கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி வழங்குகிறார்.

வாழ்த்துரையை மெய்கண்டதேவர் ஆதீனத்தைச் சேர்ந்த சித்தாந்த சரப ஞானப்பிரகாசசிவம், கலாநிதி க. கனகராசா நிகழ்த்த சிறப்புரையை தமிழீழ கல்விப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் பரிசளிப்பு உரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியமும் நிகழ்த்துவர். விழா கலைப்பேரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

ம-சி

★ வடபகுதி நோக்கி

# தடை நீக்கிய பொருட்களுடன் செல்பவர்கள் மீது கெடுபிடி

## வவுனியாவில் தொடரும் அவலம்

(கொழும்பு)

தடை நீக்கிய பொருள்களைக்கூட வடபகுதிக்கு கொண்டு செல்ல முடியாதவாறு படையினர் தமது சோதனை முகாம்களில்கெடிபிடிகளை ,அதிகரித்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

தடைநீக்கப்பட்ட சிமெந்து வவுனியா ஊடாக வடபகுதிக்குக் செல்லும் லொறி ஒன்றில் 8பைக்கற்றுகள் மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றது. ஒன்றிரண்டு சிமெந்து பைக்கற்றுகள் கூடுதலாக இருந்தாலும் ராணுவ பாணியிலான, முரட்டுதனமாக லொறிச்சாரதியும் உதவியாளரும் இம்சிக்கப்படுகின்றனர்.

தடை நீக்கப்பட்ட ரேனியோ இயந்திரம், நிழற்படபிரதி பண்ணும் இயந்திரம் என்பன அச்சு யந்திரங்கள் என தப்பாக நினைத்து வடபகுதிக்கு எடுத்துச் செல்ல முடியாதென தடுக்கப்படுகின்றது

தடை நீக்கப்பட்ட சில பொருள்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று வருமாறு படையினர் திருப்பி விடுகின்றனராம்.

இதேவேளை தடைநீக்கிய பொருள்களுக்கு அனுமதிக் கடிதம் வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுத்து வருவதாகவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியிள்ளது. -ரி

பாப்பரசர் விஜயம்:

# பௌத்தபிக்குகள்கருத்துக்கு அரசு அறிக்கை மூலம் பதில்

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பாக பௌத்த பிக்குகள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பாக அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை விளக்கும் விதமான அறிக்கை ஒன்றை வெளியிட்டது அதன் விபரம் வருமாறு:-

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் சம்பந்தமாக நான்கு பீடங்களின் மகாநாயக்கர்கள் வெளியிட்ட அறிக்கையின் இரு விடயங்களையும் வெவ்வேறானதாகவே அரசு கருதுவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சங்கைக்குரிய மகாநாயக்கர்களின் புனிதமான உணர்வுகளை நாம் மதிக்கும் அதே வேளையில் மகாநாயக்கர்கள் வெளியிட்ட இரு விடயங்களும் வெவ்வேறானவை. இவை அரசினால் தனித்தனியாகவே கையாளப்படும்.

கடந்த அரசாங்கம் விடுத்த அழைப்பை ஏற்றே பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு வருகின்றார். அவரை வரவேற்பது தற்போதைய அரசாங்கத்தின் கடமையாகும். பரிசுத்த பாப்பரசர் வத்திக்கானின் தலைவர் என்பதனால் இலங்கையின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவரை வரவேற்பார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-ரி)

கிரிக்கெட்

இலங்கையிடம் தென் ஆபிரிக்கா

# இரு தடவைகள் தோல்வி

(ஜொஹனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் ஜனாதிபதி மண்டேலா வெற்றிக்கிண்ணத்துக்காகநடைபெறும் ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட்டோட்டியின் இறுதியாட்டத்தில் கலந்துகொள்ளக்கூடிய ஒரு நிலையை இலங்கை கிரிக்கெட அணி அடைந்துள்ளது.

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையில் நேற்று முன்தினம் 2வது தடவையாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியிலும் இலங்கை அணி வெற்றி பெற்றதினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் 2வது தடவையாக நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 226 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா 73 ஓட்டங்களையும் கட்டன் அர்ச்சுனரணதுங்க60ஓட்டங்களையும் மின்னல் வேகத்தில் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணி 47.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. முத்தையா முரளிதரன்-3 விக்கெட்டுக்களையும், ருவான் கல்பகே-2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்கள்.

இவ்விரு அணிகளுக்குமிடையில் முதலில் நடைபெற்ற ஆட்டத்திலும் இலங்கை அணி 5 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் இலங்கைக்கும் - பாகிஸ்தானுக்குமிடையில் இறுதியாட்டம் நடைபெறலாமென்று தெரியவருகிறது. (வி-ரி)

# வேலைநிறுத்தங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் அடுத்தடுத்து நடைபெறும் வேலைநிறுத்தங்களுக்கு காரணமாக இருக்கும் சூத்தரதாரிகளை இனங்கண்டு கொள்வதற்காக அரசு பொலிஸாரின் உதவியை நாடியுள்ளது.

வேலை நிறுத்தங்கள் நடைபெறும் இடங்களுக்கு உடனடியாகச் சென்று ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டும்படி அரசு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

அரசின் இந்த கடும் நடவடிக்கையை எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. வி-ரி

## முழுநிலா கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்தும் முழுநிலா அறிவியல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பி.ப 4-00 மணிமுதல் 5-30 மணிவரை பெரிய மதவடி சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

தனிமனிதனும் தொடர்பாடலும்'' எனும் விடயம் பற்றி டாக்டர் ஏ. சசிகாந்தன் இந் நிகழ்வில் உரையாற்றுவார்.

# யாழ். ஓய்வூதியர்களுக்கு ரூ.260 நிலுவை கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதிய பணிப்பாளரின் சுற்றறிக்கை இல 18/94ன்படி தற்போதுவாழ்க்கைசெலவுப்படியாகரூ. 260/- பெறுபவர்களுக்கு மட்டும் 92 தை தொடக்கம் 93 வைகாசி வரை உள்ள 5 மாதங்களுக்கு பாக்கி பணம் 1300/- கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஓய்வூதிய கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் அண்மையில் கொழும்பு சென்றபோது உடனடியாக இச்சுற்றறிக்கையைப் பெற்று டிசம்பர் 94 ஓய்வூதியத்துடன் யாழ். ஓய்வூதியருக்கு 1300/- கொடுப்பனவுசெய்ய ஒழுங்கு செய்துள்ளார். -ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-

தேநீர் கடை. உணவகங்களில்

# சுகாதார சீர்கேடுகள் கண்டுபிடிக் ப்பட்டன

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள தேநீர்ச்சாலைகள், உணவகங்கள் ஆகியவற்றில் தமிழீழச் சுகாதாரப் பரிசோதனைக் குழுவினர் திடீர்ப் பரிசோதனையை மேற்கொண்ட போது. பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவது கண்டுபிடிக்கப்பட்டு, இவற்றை உடனடியாகச் சீர்செய்யுமாறு பணிக்கப்பட்டது.

சங்கானை, சித்தன்கேணி, வழக்கம்பரை, சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இத்திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இத்திடீர்ப் பரிசோதனையின் போது, உணவகம் ஒன்றில் முதல் நாள் தயாரிக்கப்பட்ட ரொட்டியும், மாட்டிறைச்சிக் கறியும் பழுதடைந்த நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

அவற்றை உடனடியாகப் புதைக்குமாறு உத்தரவிடப்பட்டதுடன் உரிமையாளர் எச்சரிக்கையும் செய்யப்பட்டார் என்றும் அறியப்படுகின்றது. -72

# செசனிய குடியரசில் கடும் மோதல்

(கரன்ஸி)

ரஷ்யப் படையினர் செசனியா குடியரசின் தலைநகர் கரன்ஸியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இத்தருணத்தில், செசனியாவில் தீவிர யுத்தம் நடப்பதாகச் சொல்லப்படுகிறது.

தலைநகருக்கு அருகிலுள்ள இராணுவ விமானநிலையம் ஒன்றை ரஷ்யப் போர் விமானங்கள் குண்டுகளால் தாக்கியுள்ளன.

செசனிய குடியரசுப் படையினர் ஆயுதங்களை ரஷ்யப் படைகளிடம் ஒப்படைத்துவிடவேண்டும் என்ற காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது.

ரஷ்யத் தலைவர் ஜெல்சின் விடுத்த வேண்டுகோளை நிராகரித்து சாகும்வரை போராடுமாறு செசனிய குடியரசுந் தலைவர் மக்களுக்கும் தமது படைகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சென்ற 16 குடியரசுகளில் செசனியாவும் ஒன்றாகும். இருந்தும் அதன் பாதுகாப்புக்கும் ஸ்திரத்திற்கும் ரஷ்யாவிலேயே தங்கியிருந்தது. ஏனைய குடியரசுகள் போல் அதுவும் பிரிந்துசெயற்பட முயன்ற நிலையில் மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன. கே-சி

மனித உரிமைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்காட்டிக் கைதுகள் நடைபெற்று வருகின்றன.

யுத்த சூழலிலிருந்து வரும் ஒருவரிடம் அடையாள அட்டை இருக்கமுடியும் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்துள்ளார்.

ஆசிரியர்கள் இடமாற்றத்தினால் மாணவர்கள் பாதிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்பட இருக்கின்றது- ம-இ

சுவிஸ்வங்கி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு முன் மேற்படி இரகசிய முறையின் கீழ் சுவிஸ் வங்கியில் கணக்குகளை ஆரம்பிக்க இலங்கையில் அறிமுகப்படுத்த அப்போது பதவியில் இருந்த ஐக்கியதேசியக் கட்சி அரசு அனுமதி வழங்கியது,

வெளிநாட்டு பணத்தையும், வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் இலங்கைக்கு கவர்ந்திழுப்பதற்காகவும், இலங்கையில் தேங்கிக் கிடக்கும் கறுப்புப் பணத்தை வங்கியில் வைப்பிலிடுவதற்கு வசதியாகவும் இந்த சுவிஸ் வங்கி வைப்புக் கணக்குமுறை இங்கு அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதன் மூலம் சர்வதேச கள்ளச் சந்தை பணத்தை வைப்பிடவும் போதை வஸ்து வர்த்தகர்களின் சட்ட விரோத நடவடிக்கைளை ஊக்கமளிக்கவுமே இது வழிவகுத்ததாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுவிஸ் வங்கியின் இரகசிய கணக்கு விவகாரம் மூலம் பணத்தை வைப்பிலிட்டுவதை விட திறந்த கொள்கைமூலம் வங்கிகளில் பகிரங்கமாக பணத்தை வைப்பிலிடுவதே மிகச் சிறந்த வழிஎன அரசு தீர்மானித்துள்ளது-

இதேவேளையில் வெளிநாட்டு பணமும், முதலீடுகளும் எதிர்பார்த்த அளவுக்கு சுவிஸ் வங்கியின் இரகசிய கணக்கு முறையின் கீழ்கிடைச்கவில்லையெனவும் நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ரி)

கொழும்பு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தடுத்து வைக்கப்படுகின்றனர்.

கிளாலி-பூநகரி படகுசேவை நடைபெறுகின்ற நாட்களில் இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

கடுமையான தாண்டிக்குளம் சோதனை விசாரணை நடவடிக்கையின் பின்னரும் வவுனியா - கொழும்பு ரயில் இடைவழியில் மறிக்கப்பட்டு சந்தேகத்துக்குரியவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

இதேவேளை வடபகுதியில் இருந்து வருபவர்கள் நொச்சிமோட்டையிலுள்ள படையினரின் முன்னணிப் பாதுகாப்பு அரணுக்குள் காலடி எடுத்து வைத்ததும் கடும் சோதனையின் பின்னர் இளைஞர்-யுவதிகளைத் தெரிவு செய்து புகைப்படம் எடுக்கப்பட்டு தடுத்துத் துருவித் துருவி விசாரணை செய்யப்படுகிறார்கள். (ரி)

லஞ்ச ஊழல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ராவின் அமைச்சர்கள் மீது எதிர்க்கட்சியினர் ஊழல் குற்றச்சாட்டுக்களை இடைவிடாது சுமத்திவருவதைத்தொடர்ந்து அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படாமல் இருப்பதற்காகவே மேற்படி அமைச்சர்கள் தமது பதவிகளை ராஜினாமாச்செய்ய முன்வந்ததாகக்கூறப்படுகிறது.

இந்த நெருக்கடியைப் போக்குவதற்காக பிரதமர் நரசிம்மராவ், தமது அமைச்சரவையை இம்மாதம் 27-ம் திகதிக்குப் பின்பு மாற்றி அமைக்கவிருக்கிறார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம், லஞ்சஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்கள் அனைவரும் தமது பதவிகளைத் துறக்கவேண்டுமென்று நேற்று ராஜயசபாவில் எதிர்க்கட்சியினர் இடைவிடாது கூக்குரல்செய்து சபையின் நடவடிக்கைகளுக்கு தடைவிதித்தமையால், சபையின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (வி-இ-ரி)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு ராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 12.45 மணியளவில் கரையோரப்பகுதிகளை நோக்கிகடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

நேற்று அதிகாலை திடீரென இடம்பெற்ற இத்தாக்குதலால் கரையோரப்பகுதி மக்கள் பெரும் பதற்றமடைந்துள்ளனர். (ரி)

மகாசங்கத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாப்பரசரின் விஜயத்தை ஒரு மதப்பிரச்னையாக பூதாகரமாக எடுத்துக்காட்டுவதற்கு இந்த தரப்பினர் முயன்று வருவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.